பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

12 07 2024 **FRIDAY** 6 45 **AM**

வணக்கம். மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- சமூகநீதியை உறுதி செய்யும் வகையிலும், பாகுபாட்டை களையும் வகையிலும் பணியாற்ற வேண்டும் என்று குடிமைப்பணி அதிகாரிகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவுறுத்தியுள்ளார்.
- நாட்டில் மீன்வள மேம்பாடு குறித்த ஆலோசனைக் கூட்டம், மதுரையில் இன்று நடைபெறவுள்ளது.
- பள்ளிக்கல்வித்துறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதாக மாநில அரசு கூறியுள்ளது.
- மக்களின் தேவைகளை அறிந்து மாநில அரசு செயல்பட்டு வருவதாக பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு தெரிவித்துள்ளார்.
- இத்தாலி சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Bollipalli Rithvik Choudary – Kaliyanda Poonacha Niki இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>><<<<

சமூகநீதியை உறுதி செய்யும் வகையிலும், பாகுபாட்டை களையும் வகையிலும் பணியாற்ற வேண்டும் என்று குடிமைப்பணி அதிகாரிகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவுறுத்தியுள்ளார்.

பல்வேறு அமைச்சகங்களில் உதவி செயலாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள இந்திய குடிமைப் பணியின் 2022ஆம் ஆண்டு பிரிவைச் சேர்ந்த பயிற்சி அதிகாரிகளுடன் அவர் புதுதில்லியில் கலந்துரையாடினார்.

நாட்டிற்கே முதலிடம் என்பது தமது வாழ்க்கையின் நோக்கம் என்றும், இதனை அனைத்து அதிகாரிகளும் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

மத்திய அரசின் பல்வேறு திட்டங்கள் குறித்து மக்களிடம் எடுத்துரைத்து பணியாற்ற வேண்டும் என்றும் பிரதமர் வலியுறுத்தினார்.

>>>><<<<

நிதி மற்றும் சமூக சவால்களை எதிர்கொள்ளும் திறமையான பெண்களை இணைத்து செயல்பட வேண்டும் என்று இந்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை கூட்டமைப்பின் மகளிர் அமைப்பு உறுப்பினர்களை குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் கேட்டுக் கொண்டுள்ளார்.

புதுதில்லியில் இந்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை கூட்டமைப்பின் மகளிர் அமைப்பின் சென்னை கிளை உறுப்பினர்களுடன் அவர் கலந்துரையாடினார்.

மகளிர் கல்வி மற்றும் பாதுகாப்பிற்கு உதவுவது இணையற்ற திருப்தியை அளிக்கும் என்று அவர் தெரிவித்தார்.

பெண் குழந்தைகளுக்கு அதிகாரமளித்தலுடன் கூடிய சமூக வளர்ச்சியை அவர் எடுத்துரைத்தார்.

குடும்பத்தின் நிதிச் சூழலை ஒரு பெண் கையாளும்போது, அக்குடும்பத்தின் பொருளாதாரமும், வளர்ச்சியும் உறுதி செய்யப்படுவதாக அவர் கூறினார்.

பெரு நிறுவனங்களின் சமூக பொறுப்புணர்வு முயற்சிகள் மூலம், மிகவும் பின்தங்கிய பெண்களுக்கு ஆதரவு அளிப்பதால், அவர்களின் வாழ்க்கையில் நேர்மறையான தாக்கத்தை உருவாக்க முடியும் என்று திரு. ஜெக்தீப் தங்கர் குறிப்பிட்டார்.

>>>><<<<

நடப்பு கரீப் பருவத்தில் மேற்கொள்ளப்படும் வேளாண் சாகுபடி குறித்து மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு. சிவராஜ்சிங் சௌஹான் புதுதில்லியில் ஆய்வு செய்தார்.

பயறு வகைகளின் சாகுபடி கடந்த ஆண்டை விட தற்போது 50 சதவீதம் அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

அனைத்து மாநிலங்களிலும் உளுந்து, மைசூர் துவரம் பருப்பு ஆகியவற்றை முழு அளவில் கொள்முதல் செய்ய மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பயிர்களுக்கு உரிய காலத்தில் உரங்கள் கிடைப்பதை உறுதி செய்யுமாறு அதிகாரிகளுக்கு திரு. சிவராஜ்சிங் சௌஹான் அறிவுறுத்தினார்.

>>>><<<<

நாட்டில் மீன்வள மேம்பாடு குறித்த ஆலோசனைக் கூட்டம், மதுரையில் இன்று நடைபெறவுள்ளது.

மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன், இணையமைச்சர்கள் திரு. எஸ்.பி. பாஹல், திரு. ஜார்ஜ் குரியன், மாநில மீன்வளத்துறை அமைச்சர் திரு. அனிதா ராதாகிருஷ்ணன் மற்றும் பல்வேறு மாநிலங்களின் மீன்வளத்துறை அமைச்சர்கள் இதில் பங்கேற்கவுள்ளனர்.

மீனவர்கள் மற்றும் அது சார்ந்த தொழில்களில் ஈடுபடுவோரின் பங்களிப்பை வெளிப்படுத்தவும், மீன்வளர்ப்பு துறை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இந்த கூட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மீன்வளர்ப்பு துறையில் ஈடுபடுவோர், ஆராய்ச்சியாளர்கள், நிபுணர்கள், தொழில்முனைவோர் ஆகியோர் இத்துறை வளர்ச்சிக்கான தங்களது கருத்துக்களையும், அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ளவுள்ளனர்.

மீன்வர்களுடனான உரையாடல், வேளாண் கடன் அட்டை வழங்குதல் உள்ளிட்டவையும் இக்கூட்டத்தின் போது நடைபெறவுள்ளது.

>>>><<<<

இளநிலை மருத்துவ பட்டப்படிப்புக்கான நீட் நுழைவுத் தேர்வு வினாத்தாளை முன்கூட்டியே வெளியிட்டதாக தொடரப்பட்டுள்ள வழக்கில் Rakesh Ranjan என்பவரை சிபிஐ கைது செய்தது.

அவரை பத்து நாள் சிபிஐ காவலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இவரை கைது செய்ததன் காரணமாக, நீட் வினாத்தாள் முன்கூட்டியே வெளியானது தொடர்பாக பல்வேறு தகவல்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதையடுத்து, இந்த வழக்கு தொடர்பாக இதுவரை 12 பேரை சிபிஐ கைது செய்துள்ளது.

சிபிஐ மற்றும் பல்வேறு மாநிலங்களின் காவல்துறையினரும் நீட் உள்ளிட்ட பல்வேறு போட்டித் தேர்வுகளில் முன்கூட்டியே வினாத்தாள் வெளியானது தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

>>>><<<<

மக்களின் தேவைகளை அறிந்து மாநில அரசு செயல்பட்டு வருவதாக பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்செட்டிப்பட்டில் ஊரகப் பகுதிகளுக்கான மக்களுடன் முதல்வர் திட்ட முகாமை தொடங்கி வைத்துப் பேசிய அவர், மாநில அரசின் பல்வேறு திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார்.

>>>><<<<

மக்களுடன் முதல்வர் திட்டத்தின் மூலம் பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கைகள் உடனடியாக நிவர்த்தி செய்யப்படுவதாக மாநில ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி தெரிவித்துள்ளார்.

தேனி மாவட்டம், லட்சுமிபுரம் ஊராட்சியில் நடைபெற்ற இத்திட்டத்தின் ஊரகப் பகுதிகளுக்கான சிறப்பு முகாமில் அவர் பங்கேற்றுப் பேசினார்.

ஊரகப் பகுதிகளில் அரசு திட்டங்களின் பயன்கள், அனைத்து தரப்பு மக்களுக்கும் கிடைக்கும் வகையில், மக்களுடன் முதல்வர் திட்டம் செயல்படுத்தப்படும் என்று திரு. பெரியசாமி குறிப்பிட்டார்.

>>>><<<<

நாட்டில் கல்வியில் சிறந்த மாநிலமாக தமிழகம் திகழ்கிறது என்றும், பள்ளிக்கல்வித்துறைக்கு மாநில அரசு முக்கியத்துவம் அளிப்பதாகவும் வனத்துறை அமைச்சர் திரு. திரு. மதிவேந்தன் கூறியுள்ளார்.

நாமக்கல் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி கலையரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பள்ளி ஆசிரியர்களுக்கு கையடக்க கணினிகளை அவர் வழங்கினார்.

பின்னர் பேசிய அவர், அரசு பள்ளிகளில் பயின்ற பலர் தற்போது பல்வேறு உயர் பதவிகளை வகித்து வருவதாக குறிப்பிடடார்.

அரசு பள்ளி மாணவர்களுக்கு மாநில அரசின் சார்பில் அளிக்கப்படும் உதவிகளை திரு. மதிவேந்தன் பட்டியலிட்டார்.

>>>><<<<

மதுபான கடைகளின் எண்ணிக்கையை படிப்படியாக குறைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மாநில மதுவிலக்குத் துறை அமைச்சர் திரு. முத்துசாமி தெரிவித்துள்ளார்.

கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மது அருந்துவோர் அப்பழக்கத்தை கைவிட தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறினார்.

முன்னதாக, ஆட்சியர் அலுவலகத்தில் சமூக பாதுகாப்பு திட்டத்தின் சார்பில் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ், ஆயிரத்து 48 பயனாளிகளுக்கு தலா 25 ஆயிரம் ரூபாய்க்கான வைப்பு நிதி பத்திரத்தை திரு. முத்துசாமி வழங்கினார்.

>>>><<<<

கடந்த 2022ஆம் ஆண்டில் தமிழில் சிறந்த நூல்களை படைத்த நூலாசிரியர்கள் மற்றும் பதிப்பகத்தாருக்கு மாநில தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. சாமிநாதன் பரிசுகளை வழங்கினார்.

சென்னையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் 33 வகைப்பாடுகளில் நூல்களை எழுதிய எழுத்தாளர்களுக்கு தலா 30 ஆயிரம் ரூபாயும், அதன் பதிப்பாளர்களுக்கு தலா பத்தாயிரம் ரூபாயும், பாராட்டு சான்றிதழும் வழங்கப்பட்டன.

>>>><<<<

அமெரிக்காவின் கலிஃபோர்னியா நகரில் வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள உலக கேரம் போட்டியில், தமிழகத்தின் சார்பில் பங்கேற்கும் நாகஜோதி, காசிமா, மித்ரா மற்றும் பயிற்றுநர் மரியா இருதயம் ஆகியோருக்கு செலவினத் தொகையாக மாநில அரசின் சார்பில் தலா ஒன்றரை லட்சம் ரூபாய்க்கான காசோலையை மாநில விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.

இதேபோல், நியூஸிலாந்தில் வரும் 16ஆம் தேதி தொடங்கவுள்ள ஜூனியர் காமன்வெல்த் வாள்வீச்சு சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்கும் ஜாய்ஸ் அஷிதாவுக்கு செலவினத் தொகையாக 2 லட்சம் ரூபாய்க்கான காசோலையையும் அவர் வழங்கினார்.

>>>><<<<

இருவரிச் செய்திகள்

ஆஸ்திரேலியாவில் இன்று தொடங்கவுள்ள பல்வேறு நாடுகளின் விமானப்படைகளின் கூட்டுப் பயிற்சியில் இந்திய விமானப்படை பங்கேற்கிறது.

>>>><<<<

தொழில்நுட்ப மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், தனியார் துறையினர் ஏழு புதிய திட்டங்களை செயல்படுத்த பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் ஒப்புதல் அளித்துள்ளது.

>>>><<<<

இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறை சார்பில் நடத்தப்படும் யோகா மற்றும் இயற்கை மருத்துவ பட்டப் படிப்புக்கு விண்ணப்பிப்பதற்கான காலக்கெடு இம்மாதம் 22ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

பெரம்பலூரில் வருவாய்த் துறையின் சார்பில் 2 ஆயிரம் பயனாளிகளுக்கு 19 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாநில போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சிவசங்கர் வழங்கினார்.

>>>><<<<

இந்திய தர நிர்ணய அமைவனம் சார்பில் விருதுநகரில் தங்கம், வெள்ளி நகை வியாபாரிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

>>>><<<<

திருப்பூர், சிக்கன்னா அரசு கலைக்கல்லூரியில் தேசிய தர நிர்ணய குழுவினர் தங்களது ஆய்வை தொடங்கியுள்ளனர்.

>>>><<<<

திண்டுக்கல்லில் குற்றவாளிகளை கண்டறியும் வகையில் 24 மணிநேரமும் செயல்படும் ஆயுதம் தாங்கிய ரோந்துப் படையை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. பிரதீப் தொடங்கி வைத்தார்.

>>>><<<<

தூத்துக்குடி மாவட்டத்தில் நடப்பாண்டில் இதுவரை 102 பேர் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. பாலாஜி சரவணன் கூறியுள்ளார்.

>>>><<<<

நீலகிரி மாவட்டம், கூடலூர் அருகே, குந்தலாடி பகுதியில் அனுமதி பெறாமல் செயல்பட்டு வந்த மனநல காப்பகத்தின் உரிமையாளர் மற்றும் ஊழியர்களிடம் காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டனர்.

>>>><<<<

விளையாட்டுச் செய்திகள்

இத்தாலியில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Bollipalli Rithvik Choudary – Kaliyanda Poonacha Niki இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 2-6, 6-1, 10-7 என்ற செட்கணக்கில் ஸ்பெயினின் Cervantes - ஸ்விட்சர்லாந்தின் Luca Margaroli இணையை வென்றது.

>>>><<<<

ஜெர்மனியில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி, ஈக்வெடாரின் Ganzalo Escobar இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-4, 6-2 என்ற செட்கணக்கில் பிரேஸிலின் Marcel Demoliner – அர்ஜென்டினாவின் Duran இணையை வென்றது.

>>>><<<<

விம்பிள்டன் டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்திற்கு செக் குடியரசின் Barbora Krejcikova, இத்தாலியின் Jasmine Paolini ஆகியோர் முன்னேறியுள்ளனர்.

>>>><<<<

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் நெல்லை அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் சேலம் அணியை வென்றது.

>>>><<<<

இந்திய கிரிக்கெட் அணி, இலங்கையில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, அந்நாட்டு அணிக்கு எதிராக மூன்று டிவென்டி டிவென்டி மற்றும் மூன்று ஒருநாள் போட்டிகளில் பங்கேற்கவுள்ளது.

முதலாவது டிவென்டி டிவென்டி போட்டி, இம்மாதம் 26ஆம் தேதி பல்லேகலேயில் நடைபெறவுள்ளது.

>>>><<<<